

முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். பின்னர் முகாமில் பயன் பெற்ற பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர். சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி துணை தலைவர் ஜோதி, மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காட்டாங்குளத்தூர் ஒன்றியம், நெடுங்குன்றம் ஊராட்சியில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றியக்குழு தலைவர் உதயா கருணாகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



### விருதுநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் – முன்னாள் அமைச்சர்

# வே.தங்கபாண்டியன் 28வது ஆண்டு நினைவு நாள்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிக்கை!

விருதுநகர், ஜூலை 30 -

விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழக நிதி, சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சருமான தங்கம் தென்னரசு தந்தையாரும், நமது மாவட்ட தி.மு.கழக முன்னாள் செயலாளரும், முன்னாள் வணிக வரித்துறை அமைச்சரும், நம் நினைவில் என்றென்றும் வாழ்ந்து வருமான மறைந்த வே.தங்கப்பாண்டியன் அவர்களின் நினைவு நாளான நாளை (31.07.2025 - வியாழக் கிழமை) காலை 09.00 மணிக்கு மல்லாங்கிணற்றில் உள்ள மறைந்த வே. தங்க ப்பாண்டி யன் அவர்களின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட உள்ளது.

அது சமயம், சட்டமன்ற உறுப்பினர்கள், தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முந்நாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தங்களது இதய அஞ்சலியினை செலுத்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாழைப்பழ ஏற்றுமதியை அதிகரிக்க

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உதவுகிறதா?

### மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30 -

தமிழ்நாடு அரசுக்கு வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்ய ஒன்றிய அரசு ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்று மக்களவையில்திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தினார். இது தொடர்பாக அவரது கேள்வி வருமாறு:

(அ) வாழைப்பழ ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் மாநில அரசுகளுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு, அரசு உதவி வழங்குகிறதா;

(ஆ) அப்படியானால், கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட திட்டங்கள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், உள்கட்டமைப்பு ஆதரவு அல்லது ஏற்றுமதி மானியங்கள் உள்ளிட்ட அதன் விவரங்கள் என்ன?

(இ) கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், ஆண்டுதோறும் ஈட்டப்பட்ட அந்நியச் செலாவணியுடன், இந்தியாவில்

இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட வாழைப்பழங்களின் அளவீடுகள் என்ன?

(ஈ) இந்தியாவில் இருந்து, குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து வாழைப்பழ ஏற்றுமதியை அதிகரிப்பதில் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் மற்றும்

(இ) தமிழ்நாட்டிலிருந்து வாழைப்பழ ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஏதேனும் குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளதா எனவும்,



(உ) அப்படியானால், கிளஸ்டர் மேம்பாடு, ஏற்றுமதி சார்ந்த பயிற்சி மற்றும் ஏற்பாடு செய்யப்பட்ட வாங்குபவர்விற்பனையாளர் சந்திப்புகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

(ஊ) தமிழ்நாட்டிலிருந்து வாழை ஏற்றுமதியை ஆதரிக்க வாழை விவ சாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு ஏதேனும் நிதி உதவி அல்லது ஊக்கத் தொகை வழங்கப்படுகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? எனவும் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியம், மிட்டா மண்டகப்பட்டு, புதுப்பட்டு ஆகிய ஊராட்சிகளுக்கான ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை துவக்கி வைத்து, சிறப்புரை யாற்றினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றிய கழக செயலாளர்கள் சீனு செல்வரங்கம், கு.செல்வமணி, அவைத் தலைவர் மோகன்தாஸ், ஒன்றிய துணைச் செயலாளர் முருகன், மாவட்ட பிரதிநிதிகள் பாலு, சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர் நதியா சுகேந்திரன், தன.தொல்காப்பியன், கழக வழக்கறிஞர் கோதண்டபாணி, முருகு.இளங்கோவன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் வெற்றி குருமூர்த்தி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பிரவீன் குமார், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் சந்திரசேகர், ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் காசிநாதன், ஒன்றிய சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மலேசியன், கிளைச் செயலாளர்கள் தனஞ்செயன் முருகன், சரவணன், சுப்பிரமணி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின்

# வெள்ளப் பாதிப்புக்கு உரிய நிவாரண நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கியதா ?

### மாநிலங்களவையில் – மரு. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி

புதுடெல்லி, ஜூலை 30 -

கடந்த ஐந்து வெள்ளத்தால் நாடு தழுவிய அளவில், குறிப்பாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பற்றிய ஆய்வுகளை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதா? நடத்தியிருக்கையில் அது சார்ந்த விவரங்களை பகிரவும்.

தமிழ்நாட்டில் வெள்ளத் தடுப்பு மற்றும் வெள்ள பாதிப்புகளில் இருந்து தற்காத்துக்கொள்வதற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுக்கான திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசு பரிந்துரைத்துள்ளதா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களை பற்றிய தரவுகளை ஒன்றிய அரசு சேகரித்துள்ளதா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளுகளில் சிக்கிய மக்களுக்கு உரிய இழப்பீடுகளை ஒன்றிய அரசு வழங்கியுள்ளதா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., மரு. கனிமொழி என்.வி.என். சோமு அவர்கள் கேள்வி எழுப்பி இருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய ஜல் சக்தித்துறை அமைச்சர் ராஜ் பூஷன் சவுத்ரி அளித்துள்ள பதில் வருமாறு:

ஒன்றிய நீர் ஆணையத்தால் 1984ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை எடுக்கப்பட்டுள்ள செயற்கைக் கோள் ஆய்வு தரவுகளின்



படி 21.21 மில்லியன் ஹெக்டேர் அளவிலான நிலப்பரப்பு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மண் அரிப்பை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் சார்ந்த திட்டங்களை உருவாக்குவதும் அதுசார்ந்த மேலாண்மை பொறுப்பும் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதியான உதவிகளை ஒன்றிய அரசு தீவிர வெள்ள பாதிப்பு பகுதிகளில் மேற்கொண்டுவருகிறது. குறைந்த செலவில் கட்டமைப்பு மற்றும் கட்டுமானங்கள் சாராத வகையிலான வெள்ள பாதிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கு 11 மற்றும் 12வது “வெள்ள பாதிப்பு மேலாண்மை” திட்டங்கள் மற்றும் “வெள்ள மேலாண்மை மற்றும் எல்லை பகுதிகள் திட்டம்” மூலம் ஒன்றிய அரசு வெள்ளத்தை கட்டுப்படுத்திடுதல், மண் அரிப்பு தடுப்பு, கழிவு நீர் பாதை மேம்பாடு, கடல் மண் அரிப்பு தடுத்தல் உள்ளிட்ட அம்சங்களுக்கு ஒருங்கிணைந்த உதவிகளை 2026ம் ஆண்டு வரை வரையறுக்கப்பட்ட செலவினங்கள் அடிப்படையில் வழங்கிவருகிறது.

கட்டமைப்புகள் சாராத வெள்ள பாதிப்பு மேலாண்மைக்காகவும், குறுகிய கால வெள்ள முன்னறிவிப்புகள் மற்றும் நீர்த் தேக்கங்களுக்கான நீர்வரத்து பற்றிய தரவுகளையும் 24 மணி நேரத்துக்கு முன்பாக அந்தந்த மாநில அரசுகளுக்கு ஒன்றிய நீர் ஆணையம் வழங்குகிறது. தற்போதைய நிலவரப்படி 350 மையங்கள் மூலம் வெள்ள முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 17 வெள்ள முன்னறிவிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை https://ffs.indiawater.gov.in என்ற பிரத்யேக இணையதளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

மழைப்பொழிவு மற்றும் வெள்ள நீர் வரத்து பற்றிய தரவுகள் https:aff.indiawater.gov.in என்ற இணையதளம் வழியே பகிரப்படுகிறது. ஒன்றிய நீர் ஆணையம் மாநில பேரிடர் மேலாண்மைத் துறையுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்கிறது. ஒன்றிய அரசு உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குகிறது. அந்தந்த மாநில அரசுகளிடம் மட்டுமே வெள்ள மேலாண்மை மற்றும் இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் சார்ந்த முதன்மையான பொறுப்பு உள்ளது. ஏற்கெனவே மாநில பேரிடர் மேலாண்மை நிதிக்கு ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நிலையில் ஒன்றிய அரசால் வரையறுக்கப்பட்டுள்ள 12 வகையான பேரிடர் மற்றும் இயற்கை சீற்றங்களுக்கு மாநில அரசு இழப்பீடுகளை வழங்கிவருகிறது.

தீவிர பாதிப்புகள் ஏற்படும்போது தேசிய பேரிடர் நிதியிலிருந்து துறை சார்ந்த கண்காணிப்புக்குழு வழியே கூடுதல் நிதி உதவிகள் வழங்கப்படுகிறது. மாநில மற்றும் தேசிய பேரிடர் நிதி மூலம் நிவாரண ஏற்பாடுகள் மட்டுமே மேற்கொள்ளமுடியும். இழப்பீடுகள் வழங்க இயலாது.

23.07.2025 நிலவரப்படி 2025 26ம் ஆண்டிற்கான மாநில பேரிடர் நிதியாக ரூ. 1322.40 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ. 992 கோடியும் மாநில அரசின் பங்கு ரூ. 330.40 கோடியும் ஆகும். ஒன்றிய அரசின் பங்கில் முதல் கட்டமாக ரூ. 496 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2025 26ம் ஆண்டிற்கு 23.07.2025 நிலவரப்படி ரூ. 522.34 கோடி இயற்கைப் பேரிடர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 25 ஆண்டுகால கட்டத்தில் 3 இலட்சத்து 80 ஆயிரத்து 985.97 ஹெக்டேர் பாசன நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய ஜல் சக்தித்துறை அமைச்சர் திரு. ராஜ் பூஷன் சவுத்ரி அவர்கள் பதில் அளித்துள்ளார்.



உங்களுடன் ஸ்டாலின் என்ற முன்னெடுப்பின் கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் ஒன்றியம் பழவேற்காடு ஊராட்சியில் நடைபெற்ற திட்ட முகாமில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்து கொண்டு மக்களுக்கான தேவைகளை மனுக்களாகப் பதிவு செய்தார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் பொதுக்குழு உறுப்பினர் பா.செ. குணசேகரன் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் மு.முரளிதரன் , மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் முகமது அலவி, மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



தாம்பரம் மாநகராட்சி 4,வது மண்டலத்திற்கு உட்பட்ட 58வது வார்டு புது பெருங்களத்தூர் சேரன் தெருவில் உள்ள அறிஞர் அண்ணா பூங்காவை 1 கோடியே 89 லட்சம் செலவில் அறிவியல் பூங்காவாக மேம்படுத்தப்படும் பணிகள் நடைபெற்று வருவதையும் இப்பணிகளை விரைந்து முடிக்க கோரியும் ஒப்பந்ததாரருக்கு மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் ஆலோசனை வழங்கியும் ஆய்வு மேற்கொண்டார் உடன் ஜெபா,பஞ்சோதி,மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் வி.தங்கத்துரை மற்றும் நலச்சங்க நிர்வாகிகள் பொது மக்கள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாழை மு. கருணாநிதி

### ஜூலை 30 (1986)



இளமைப் பருவம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினராக மக்களின் மகத்தான ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

“மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கே அதிக வாய்ப்புத் தரவேண்டும் என்பது எனது ஆசை! எனது சொந்த மாவட்டத்திலேயே அந்த ஆசை தாழை மு. கருணாநிதி மூலம் நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு தாம் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை தாழை தமது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.